சுருக்கம்

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் – ஜுலை 2010–ல் நடைபெற்ற உள்ளாட்சித் தற்செயல் தேர்தலுக்கு M/s. Mysore Paints & Varnish Pvt. Ltd. நிறுவனத்திடமிருந்து அழியா மைக்குப்பிகள் வாங்கிய வகையிலும், தேர்தல் செலவினங்களுக்காக மாவட்டங்களுக்கு மீள வழங்க வேண்டியிருப்பதாலும், ரூ.3,42,000/– கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.98 நாள் 14.10.2010

படிக்கப்பட்டவை:

செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை–106,
கடித ந.க.எண்.க2/1843/2010, நாள் 26.8.2010.

* * *

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், செயலாளர் (பொறுப்பு), தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் அவர்கள் 26.8.2010 நாளிட்ட தமது கடிதத்தில், சாதாரண உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் தற்செயல் தேர்தல்களுக்காக, அழியா மைக்குப்பிகளை M/s. Mysore Paints & Varnish Pvt. Ltd. என்ற நிறுவனத்தின் மூலமாக வாங்கி, மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றும் ஊரக உள்ளாட்சித் தேர்தல்களுக்காக வாங்கப்படும் அழியா மைக்குப்பிகள் "2015-00-109-AA. Elections to Panchayats- 24. Materials and Supplies" என்ற கணக்குத் தலைப்பில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், 2010–2011 நிதியாண்டில் மேற்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.2,30,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) (Budget Estimate)–ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் ஜுலை 2010–ல் நடைபெற்ற உள்ளாட்சித் தற்செயல் தேர்தலுக்காக, அழியா மைக்குப்பிகள் வாங்கிய வகையில் ரூ.2,39,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரம் மட்டும்) பட்டியல் M/s. Mysore Paints & Varnish Pvt. Ltd. நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேலும், மேற்காணும் தற்செயல் தேர்தல்களுக்காக செலவிடப்பட்ட செலவினங்களை மீளப்பெறும் பொருட்டு மாவட்டங்களிலிருந்து கருத்துருக்கள் வரவேண்டியுள்ளது. முன்னதாக நடைபெற்ற தற்செயல் தேர்தலுக்கான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டதற்கான ரூ.17,500/– மீளப்பெறும் பொருட்டு மாவட்டங்களிலிருந்து கருத்துருக்களும் வரப்பெற்றுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

**2.** தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் மேற்படி தேர்தல் செலவினங்களுக்காகத் தேவைப்படும் நிதி ஒதுக்கீட்டின் விவரங்களை பின்வருமாறு தெரிவித்துள்ளது.

| | |
|---|---|
| Budget Estimate 2010-2011–ல் “2015-00-109. AA. Elections to Panchayats – 24. Materials and Supplies” கணக்குத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு | ரூ.2,30,000/– |
| M/s. Mysore Paints & Varnish Pvt. Ltd., நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை (ஜூலை 2010–ல் நடைபெற்ற தற்செயல் தேர்தலுக்காக அழியா மைக்குப்பிகள் வாங்கியது) | ரூ.2,39,000/– |
| முன்னதாகவே மாவட்டங்களிலிருந்து வரப்பெற்றுள்ள தேர்தல் செலவினங்களுக்கு மீள வழங்கப்பட வேண்டிய தொகை | ரூ.17,500/– |
| ஜூலை 2010–ல் நடைபெற்ற தற்செயல் தேர்தலுக்காக மாவட்டங்களில் செலவிடப்பட்ட தேர்தல் செலவினங்கள் மீள வழங்கும் பொருட்டு தேவைப்படும் தொகை | ரூ.3,15,000/– |
| மொத்தம் | ரூ.5,71,500/– |
| <u>கழிக்க</u>: Budget Estimate 2010-11–ல் Panchayats - 24. Materials and Supplies” கணக்குத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றது | (–) 2,30,000/– |
| தேவைப்படும் கூடுதல் தொகை | ரூ.3,41,500/–<br>(அல்லது)<br>ரூ.3,42,000/– |

ஆகவே, மேற்காணும் செலவினத்தை “2015-00-109-AA. Elections to Panchayats - 24. Materials and Supplies” என்ற கணக்குத் தலைப்பில் மேற்கூறிய காரணங்களினால் உள்ளாட்சித் தற்செயல் தேர்தலுக்கு M/s. Mysore Paints & Varnish Pvt. Ltd. நிறுவனத்திடமிருந்து, அழியா மைக்குப்பிகள் வாங்கிய வகையிலும், தேர்தல் செலவினங்களுக்காக மாவட்டங்களுக்கு மீள வழங்க வேண்டியிருப்பதாலும், இத்தலைப்பின் கீழ் மேலே குறிப்பிட்டுள்ளவாறு ரூ.3,42,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பத்திரண்டாயிரம் மட்டும்) கூடுதல் நிதி ஒதுக்கீடாக வழங்கும்படி, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளது.

**3.** தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கருத்துருவினை ஏற்று, உள்ளாட்சி தற்செயல் தேர்தலுக்கு M/s. Mysore Paints & Varnish Pvt. Ltd. நிறுவனத்திடமிருந்து அழியா மைக்குப்பிகள் வாங்கிய வகையிலும், தேர்தல் செலவினங்களுக்காக மாவட்டங்களுக்கு மீள வழங்க வேண்டிய தொகைக்காகவும், ரூ.3,42,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பத்திரண்டாயிரம் மட்டும்) கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

2015 – 00 – தேர்தல்கள்
109 – ஊராட்சிகள் – உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்
I – திட்டத்தில் சேராதது
AA – ஊராட்சிகளுக்கான தேர்தல்
24 – பொருள்களும் வழங்கலும் (து.தொ.கு.2015–00–109–AA–2409)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை எதிர்நோக்கி, இச்செலவினத்தினை மேற்கொள்ள தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையச் செயலருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இச்செலவினத்தை 2010–2011–ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்குரிய கருத்துருக்களை உரிய காலத்தில் தவறாது அனுப்புமாறு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையச் செயலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 178/DS(B)/2010, நாள் 7.10.2010–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.1083 (ஆயிரத்து எண்பத்து மூன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்,
எண்.208/2, ஜவஉறர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை–106.
கருவூலக் கணக்கு அலுவலர், சென்னை–9.
கருவூலம் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை–15.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/9.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
நகல்
நிதித் (RD&LE/வரவு செலவு (பொது–II) துறை, சென்னை–9.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //